# பரி. பவுல் அஹமதி தமிழ் திருச்சபை - குவைத்

AHMADI TAMIL CHURCH
ST.PAUL'S CHURCH
KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD

CHURCH ANNIVERSARY 49th

SUNDAY SCHOOL 23rd

## 49 - வது ஆண்டு விழா

## சிறப்பு மலர்

# எழும்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது

( ஏசாயா 60:1 )

NOV ' 7 , 2025

இதழ் : 06

மலர் : 27

ATC TAMIL
LIVE
STREAMING

WWW.AHMADITAMILCHURCH.COM

# கடந்த வருடம் நம் சபைக்கு வருகை தந்த ஊழியர்கள்



# முதன்மை ஊழியரிடமிருந்து

தேவனுக்கு பிரியமான சபையினருக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆசீயும் வாழ்த்துகளும் பூரணமாய் உண்டாவதாக. கிருபையாய் நம்மையும், நம் குடும்பத்தையும், நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

கர்த்தரின் பெரிதான கிருபையினால் 2025–ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் பிரவேசிக்க செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம். கர்த்தரின் பெரிதான கிருபையினால் வரும் நவம்பர் மாதம் 7 –ம் தியதி நம் சபையின் 49 –வது ஆண்டுவிழாவை கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி நேர்த்தியாய் சிறப்பிக்கவும், கர்த்தர் நம்முடன் இருக்கவும், குறைவில்லாமல் நடத்தவும், கர்த்தரின் கிருபை நம்மைவிட்டு விலகாமல் இருக்கவும், தயவு செய்ய நாம் ஜெபிப்போம். கர்த்தர் தம் காக்கும் கரத்தால் நம் எல்லோருடைய கரங்களையும் பற்றி நடத்துவாராக. தேவனின் நாமமே மகிமை அடையட்டும்.

**"நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்"** (மத். 5:14) என்று இயேசு கூறியிருக்கிறார். இயேசு தேவனாக இருக்கிறதினால், எல்லாம் அறிகிறவராக இருக்கிறதினால், இயேசு நம்மில் நமக்குள் இருக்கிற வெளிச்சத்தைக் கண்டு கொண்ட காரணத்தினால் தான் நம்மை பார்த்து நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கிறீர்கள் என்று சொல்லுகிறார். நாம் இதை அறிந்திருந்தும் புரிந்திருந்தும் பாறையில் விழுந்த விதையைப் போல நாம் அதை ஏற்றுக் கொள்ளாத மந்த இருதயமுள்ளவர்களாய் இருக்கிறபடியால் கர்த்தரின் பிள்ளைகளாகிய நம்மில் உள்ள ஒளியானது விளக்கைக் கொளுத்தி மரைக்காலால் மூடிவைத்தது போல மூடி வைக்கப்பட்ட நம்முள் உள்ள வெளிச்சமானது நமக்கும் பிறருக்கும் பிரையோஜனமற்றதாக காணப்படுகிறது.

கண் திறக்கப்பட்டவன் உரைக்கிறது போல இப்பொழுது உணர்வடைந்தவர்களாகிய நாம் இன்றாவது மூடப்பட்ட நிலையில் காணப்படும் அந்த மூடியை தேவனை பற்றும் விசுவாசத்தோடு எடுத்து அகற்றி விட்டு **"இயேசு (அவர்) ஒளியாயிருக்கிறது போல"** (1யோவா. 1:7) நம்மில் வாசம் செய்யும் இயேசுவோடு கூட நாமும் ஒளியில் இருக்கிறோம் என்ற விசுவாசத்தால் உண்டாகும் நிச்சயத்தோடு இயேசு கிறிஸ்துவின் கரங்களை பற்றிக் கொண்டு முன் நடப்போம். அப்பொழுது நாம் செல்லும் நம்முடைய பாதை வெளிச்சமாய் மாறும். எங்கெங்கு இருள் என்று நினைக்கிறோமோ அங்கே காணப்படுகின்ற இருளானது நம்மில் உண்டாகும் வெளிச்சத்தால் மறைந்துபோம்.

நாம் சோர்ந்து இருந்தது போதும். ஏசாயா தீர்க்கதரிசி சொன்னதுபோல **"எழும்பி பிரகாசி : உன் ஒளி வந்தது"** (ஏசா. 60:1) **"கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்: உன் துக்க நாட்கள் முடிந்துபோம்"** (ஏசா. 60:20). **"இனித் தீங்கைக் காணாதிருப்பாய்"** (செப். 3:15). கர்த்தர் எல்லோரோடும் கூட சதாகாலமும் தங்கி தரித்திருப்பாராக. நம்மேல் மாறா அன்பும் கிருபையுமுள்ள தேவனுக்கே என்றென்றும் மகிமை உண்டாவதாக. சபையார் யாவருக்கும் நம்சபையின் 49– வது ஆண்டின் நல்வாழ்த்துகள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

கர்த்தரின் கிருபையில்,
சகோ. ஆரோக்கியதாஸ்.

# செயற்கை நுண்ணறிவு யுகத்தில் (AI) வாழும் நாம் சத்திய வேதத்தை பாதுகாப்பது எப்படி?

முடிவுகளை எடுக்க செயற்கை நுண்ணறிவை (AI) சார்ந்து வாழும் காலம் இது. சமுதாயம், மனிதர்களின் கருத்துக்கள் நவீன கலாச்சாரம் மற்றும் நெறிமுறைகளை முக்கியப்படுத்தி வருகிறது. நவீன தொழில் நுட்பங்கள் ஆச்சரியமாய் தோன்றினாலும் அவை குறைபாடுள்ள மனித ஞானத்தை சார்ந்தது என்பதை நாம் மறந்து போகக் கூடாது. அவை நிரந்தரமான சத்தியத்துக்கு ஈடு கிடையாது. நவீன தொழில் நுட்ப கலாச்சாரத்தில் சிக்கிக் கொள்ளாமல், மாறாத தேவனுடைய வார்த்தையின் மேல் உள்ள விசுவாசத்தை எப்படி பாதுகாத்துக் கொள்வது? கிறிஸ்தவர்களுக்கு இது ஒரு சவால்.

இவ்வுலகம் சத்திய வேதாகமத்தைப் பழமையானதாகவும், பொருளற்றதாகவும் கருதலாம். ஆனால் வேதம் நமக்கு அறிவுறுத்துகிறது "புல் வளர்ந்து பூ உதிரும் நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் (ஏசாயா 40 :8 )

## 1. தேவனுடைய வார்த்தையே மாறாத அளவுகோல் :

மனிதனின் பாரபட்ச மற்றும் தவறுகள் நிறைந்த முடிவுகளின் அடிப்படையில் பயிற்சி பெற்ற (AI) போல் இல்லாமல் தேவ வார்த்தையானது நித்தியமானது, பழுதற்றது மற்றும் முழுமையானது."உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17 : 17 )" வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை"( மத்தேயு 24 : 35 ) விசுவாசிகளாகிய நாம் நம் வாழ்வில் வேதத்திற்கே முதல் அங்கீகாரம் கொடுக்க வேண்டும் கலாச்சாரத்தை மனித விருப்பத்தை மற்றும் உலக ஞானத்தை சார்ந்த தொழில் நுட்பத்திற்கு அல்ல.

## 2. விசுவாசத்தைப் பாதுகாக்க ஆயத்தமாயிரு :

இன்றைய சமுதாயம் கிறிஸ்தவ நம்பிக்கைகளைக் கேள்வி கேட்கிறது ஏற்றுக்கொள்ள முடியாதது அல்லது பழமையானது என்று சொல்லி நிராகரிக்கிறது. இச்சூழலில் நம்முடைய விசுவாசத்தை தேவ ஞானத்தோடும், கிருபையோடும் பேணிகாக்க வேண்டும். "உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1 பேதுரு 3 : 15) வேத அறிவிலும் ஆவிக்குறிய விவேகத்திலும் நாம் ஆயத்தமாய் இருக்க வேண்டும். நாம் எதை விசுவாசிக்கிறோம் மற்றும் ஏன் விசுவாசிக்கிறோம் என்பதில் தெள்ளத்தெளிவாக இருக்க வேண்டும். (AI) போன்ற நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் உலகம் சார்ந்த வாக்குவாதங்கள் வரும் போது அன்புடன் பதில் சொல்ல அறிந்திருக்க வேண்டும்.

## 3.உலகத்தோடு ஒத்து அல்ல மறுரூபமாக்கப்பட்ட வாழ்க்கை தேவை :

AI போன்ற தொழில் நுட்பங்கள் உலகத்தோடு ஒத்து வாழ வலியுறுத்துகின்றன. ஆனால் கிறிஸ்தவர்கள் நவீன தொழில் நுட்பத்தை சார்ந்த ஆலோசனையின் படியல்ல வேதத்தின் அடிப்படையில் புதிய மனிதனாய் வாழ அழைக்கப்படுகிறோம். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்...... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12 : 2 ) நவீன தொழில் நுட்பம் அல்ல வேத வசனத்தின் அடிப்படையில் நம் வாழ்வு சிந்தனைகள் மற்றும் நோக்கம் அமையட்டும்.

## 4. உபத்திரவத்திலும் உறுதியாய் நிலைகொண்டிரு:

நவீன கால தொழில் நுட்பங்கள் தவறானவற்றை பரப்பக் கூடும் மற்றும் வாழ்வின் நெறி முறைகளை மனித நேயத்திற்கேற்ப மாற்றியமைக்கும் திறனுள்ளது. மக்கள் சத்தியத்திற்கு புறம்பான பொய்களை விரும்புவார்கள் என்று வேதம் எச்சரிக்கிறது. "ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக் கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்த்துக் கொள்கிறார்கள் (2.தீமோத்தேயு4: 3).

லௌகிக ஞானத்தினாலும் மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (கொலோ 2 : 8).
நாம் ஆவியிலே விழிப்பாய் இருக்க வேண்டும் மனிதர்களிடமிருந்தோ அல்லது நவீன நுட்பக்கருவிகளில் இருந்தோ வரும் ஒவ்வொரு தகவலையும் வேதத்தோடு சோதித்துப் பார்க்க வேண்டும்.

## 5. உயிருள்ள சாட்சியாய் வாழ்ந்திடு :

AI யால் தகவல்களைக் கொண்டு ஒரு வடிவமைப்பு உருவாக்க முடியும் ஆனால் மறுரூமாக்கப்பட்ட வாழ்வை உருவாக்க முடியாது. நம்முடைய விசுவாசத்தை வெறும் வார்த்தைகளால் அல்ல நம் வாழ்க்கையின் மூலமாய் வெளிப்படுத்த வேண்டும்.

## முடிவு :

செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற நவீன கால வளர்ச்சிகள் உலகத்தின் எதிர்காலத்தை அமைத்துக் கொண்டிருக்கும் காலத்தில் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் மாறாத சத்திய வேதத்தில் நிலைத்திருக்க வேண்டும். நமது விசுவாசம் மாறிவரும் காலப் போக்குகளில் அல்ல மாறாக மெய்யான தேவனிலும் அவருடைய வார்த்தைகளிலும் சார்ந்திருக்கிறது. உண்மையை சத்தியத்தை இயந்திரங்களால் உருவாக்கமுடியாது அல்லது கலாச்சாரத்தால் வடிவமைக்க முடியாது. தேவன் ஒருவரே சத்தியத்தை வெளிப்படுத்த முடியும். "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி 13 : 8 ).

உலகம் எப்படி மாறினாலும் சரி நாம் சத்தியத்தை தைரியமாகப் பேணவும் அதன்படி விசுவாசித்து வாழவும் அதைத் தெளிவாய் மற்றவர்களுக்கு அறிவிக்கவும் நம்மை அர்ப்பணிப்போம்! ஆமென்!!

கிறிஸ்துவின் பணியில்,

**பாஸ்டர். ஸ்டாலின் செல்வமணி**

## அன்பின் ஆலயம்

அன்பின் ஆலயம் இது அமைதியின் வாசல்
குறைநீக்கும் தேவனின் கிருபை பொழியும் இடம்
இறைவனின் கரம் தாங்கி இத்தனை வருடங்கள்
மாறிடும் காலங்கள் மறைந்திடும் முகங்கள்
மாறாத தேவனின் கரம் எம்மைக் காத்தது.
அர்ப்பணித்த ஊழியர்கள் அன்பான விசுவாசிகள்
அனைவரின் தியாகத்தால் செழித்தது இந்தச் சபை.
அடுத்த தலைமுறைக்கும் ஒளியாகத் திகழ
புதிய பலத்தோடு முன்னேறிச் செல்வோம்.
ஆண்டுவிழா நாளில் நன்றியுடன் துதிப்போம்
அனைவருக்கும் நல்வாழ்த்துகள் கூறி மகிழ்வோம்!

On this anniversary day, we offer many thanks,
Wishing you all a blessed anniversary.

Missionary Ministry
ATC Churuch Kuwait

**Flock Ministries**
Kids Missionary Movement
Unit of Flock Foundation Trust
7/74, AKA Koil Street; AKA Nagar; Oragadam;
Ambattur; Chennai 600053

**Rev. George Stephenson.** M.A; M.Phil; PGD EHRM; BCS
Director

**Mrs. Elizabeth Visalakshi.** M.Sc; MA; M.Ed; M.Phil.
President

05.11.2025
Chennai 600053

To
**The President & Congregation**
Ahamadhi Tamil Congregation
Kuwait

49 ஆண்டுகளைக் கடந்து யூபிலி ஆண்டை நோக்கி வெற்றியுடன் ஓடிக்கொண்டிருக்கும் அகமதி தமிழ் திருச்சபை விசுவாசிகளை கிறிஸ்துவுக்குள் பேரன்புடன் வாழ்த்துகிறேன்.

"இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" மத்தேயு 16:18 என்கிறது கர்த்தருடைய வார்த்தை.

இந்த வார்த்தை நமக்கு உணர்த்தும் செய்தி என்னவென்றால் திருச்சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்ள முயற்சிக்கும். ஆனால் அவைகளால் மேற்கொள்ள முடியாது. காரணம் இதைக் கட்டுவது கர்த்தர். இதனை தமக்கென்று கட்டிவருகிறார். பாறையாகிய அவருடைய சொந்த சரீரத்தின்மேல் கட்டிக்கொண்டிருக்கிறார். அவருடைய மணவாட்டியாக அவருடன் எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை திருச்சபை அசையாமல் நிலைத்திருக்கும் என்பது அவருடைய வாக்குறுதி.

திருச்சபை என்பது கட்டடம் (பசிலிக்கா) அல்ல. மாறாக, அது கிறிஸ்துவினால் உருவாக்கப்பட்ட விசுவாசிகளின் ஐக்கியம் (எக்லீசியா) என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆக, சபையாகிய நம்முடைய ஐக்கியம் கர்த்தரிலும் அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருக்கும்போது பாதாளத்தின் வாசல்கள் எந்த ரூபத்தில் வந்தாலும் திருச்சபையை அசைக்க இயலாது. கர்த்தர் எப்போதும் அதன் தலைவராக செயல்படுவார்.

அன்பு அகமதி விசுவாசிகளே, இந்த வார்த்தைக்கு சாட்சியாக கடந்த 49 ஆண்டுகளாக நீங்கள் நிலைத்திருக்கிறீர்கள். கர்த்தர் உங்களைக் கட்டிவருகிறார் என்பதற்கு நானும் ஒரு சாட்சி. கர்த்தர் மீது உங்களுக்கு இருக்கும் விசுவாசம், அன்பு, வேத வார்த்தைகளின் மேல் உங்களுக்கு இருக்கும் மிகுந்த ஆர்வம், விசுவாசிகளாகிய உங்களுக்கிடையில் இருக்கும் பரிசுத்தமான ஐக்கியம், கிறிஸ்துவின் மந்தைக்கு வெளியே இருக்கும் ஆத்துமாக்கள் மேல் உங்களுக்கு இருக்கும் தாகம், ஆகியவற்றைக் கண்டு வியந்தவன் நான்.

ஜீவனுள்ள கல்லாகிய கிறிஸ்துவின்மேல் கட்டப்பட்டு வரும் உங்களை பிசாசு எந்த ரூபத்தில் தாக்கினாலும் நீங்கள் அசையாமல் நிலைத்திருப்பீர்கள். உங்கள் குடும்பங்கள் செழித்து வளரும். கர்த்தருடைய வார்த்தையின்படியே நீங்கள் செய்கிறவைகள் அனைத்தும் வாய்க்கும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

யூபிலி ஆண்டை வெற்றியுடன் கொண்டாட குடும்பமாக தயாராகுங்கள்.

சபைத்தலைவர், செயற்குழு அங்கத்தினர்கள், ஊழிய பொறுப்பாளர்கள், என் செல்ல குழந்தைகள், வாலிபர்கள், மற்றும் குவைத் தேசத்திற்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படும் திருச்சபை விசுவாசிகள் அனைவரையும் மந்தை ஊழியங்கள் அன்புடன் வாழ்த்துகிறது.

அன்புடன்

**Rev. George Stephenson**
Director - Flock Ministries

*...and you shall teach them diligently to your children. Deut. 6:7*

## நீதியின் கூடாரமே!!

பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதயில்
அமைந்திருக்கும் எனது தமிழ் திருச்சபையே!
நீதியின் வெற்றி வேந்தராக வீற்றிருக்கும் எனது
இயேசப்பாவை முதலில் வாழ்த்தி
வணங்குகிறேன்.

49 ஆண்டுகளாக சிறந்து விளங்கும் எம்
சபையை, இயேசுவே உம் பாதத்தில்
அர்ப்பணிக்கிறேன்.

எம்மை ஆசீர்வதித்து வழி நடத்தி வந்தமைக்கு
என் மனமார்ந்த நன்றியை செலுத்துகின்றேன்.
நீதியை நிலைநாட்டும் எம் தெய்வமே! உம்
அன்பின் நிழலில் எந்நாளும் வாழ்ந்திட
அருள் புரிந்தருளுகின்ற
என் அன்பின் நேசரே!!

சோர்வுகள் நேரிட்ட வேளையில் எமக்கு
மத்தியஸ்தராக இருந்து முப்புரி நூல்
அருந்திராவண்ணம்,
எம் குடும்பங்களை வேலியடைத்து
காத்துவருவதற்கு என் உள்ளத்து நன்றியை
தெரிவிக்கிறேன்.

ஆலமரமாகயிருந்து விழுதுகளாகிய எம்மை
ஆசீர்வதிக்க, சிரம் தாழ்த்தி,
எம் கரம் கூப்பிவேண்டி, நீ
பல்லாண்டு காலம் வாழ்க! வாழ்க என
மனமார வாழ்த்துகிறேன்!!!

இப்படிக்கு,
A. பியூலா மெர்ஸிபால்

## வெற்றி நிச்சயம்...

மறுமை என்ற வார்த்தை ஒன்றையே
மனதில் பொருந்தி!
கணக்கு இன்றி உழைப்பைப் புகுத்தி!
துவள வைக்கும் தோல்விகளை தகர்த்து !
மனம் முழுவதும் விசுவாச நம்பிக்கை சுமந்து !
விழாது தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும் சபையே!
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே

நீ நீடூழி வாழ்க பல்லாண்டு என
நானும் வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
சகோ. ஆண்டனி

## வாழ்த்துகள்

அஹமதி தமிழ் திருச்சபையே
நீர் என் அகத்தின் முழுமதியாய்...
49–வது ஆண்டின் நிறைவை காணும்
என் நிறைமதியாய்...
அநேக ஊழியங்களை செய்து வரும்
எங்கள் ஊக்கமதியாய்...
பல ஊழியர்களை போஷித்த பாசமதியாய்...
இன்னும் பல ஆண்டுகளை காணப்போகும்
எங்களின் ஒப்பற்றதும் சிறப்புமுமாய்
பெருமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்
அஹமதி தமிழ் திருச்சபையே!!
நீர் என்றென்றும் வாழ வேண்டும்,

என்று விரும்பும் உமதடிமை நான்.

இப்படிக்கு,
சகோ.கிறிஸ்டோபர்

## Ahmadi Tamil Church 49th Anniversary Poem

Forty nine years, and still the light stays on.
Burning steady through every storm
Not just a church, but a home of prayer.
Where GOD's voice feels close, warm and
known.

Hands have built, hearts have healed,
Songs have risen, tears have dried.
Here, faith was not just spoken-
It was lived, quietly, side by side.

Children grew in its soft embrace,
Elders stood and taught the way:
Every Friday, one more story
Of how grace never fades away.

Years may change, the world may spin,
But his promise stays the same.
And this church our Ahamdi home
Still carries his holy flame.

As fifty nears, we bow in thanks,
For every prayer, each guiding year.
GOD began this work with love
And love still holds it here.

-Andrea Magdalene.

# வாலிப பிள்ளைகள்

வாலிய வயது ஆண்டவருக்கு பிரியமான வயது காரணம் அவரும் 30 வயது வாலியனாகதான் தன் ஊழியத்தை செய்தார். வாலிப வயதுதான் ஆண்டவருக்கு பிரியமாய் வாழும் வயது. சாத்தானும் அதற்குதான் வாலிபர்களை தன் பாதைக்கு இழுக்க முயற்சிக்கிறான். இயேசுவுக்கும் ஊழியத்தை ஆரம்பிக்கும் முன் சோதனைகளை கொடுத்தான் ஆனாலும் இயேசுவோ அதில் ஜெயம் எடுத்தார். எப்படி ஜெயம் எடுத்தார், வேத வசனங்களை கொண்டு ஜெயம் எடுத்தார். நாமும் அவரைப் பின்பற்றி வேத வசனங்களை வாசித்து தியானித்து வேதவசன வெளிச்சத்தில் நடந்தால் நிச்சயம் ஜெயம் பெறுவோம்."வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக் கொள்ளுகிறதினால் தானே" சங்கீதம் 119:9.

சில வாலிபர்கள் எப்படி தங்களை காத்து கொண்டார்கள் என்பதை கிழ்வரும் பகுதியில் பார்க்கலாம்.

## 1.யோசுவா:

மோசேக்கு பிறகு இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்த கர்த்தர் யோசுவாவை தெரிந்து கொண்டார். காரணம் என்னவென்றால் நூனின் குமாரனாகிய யோசுவா, மோசேயின் பணிவிடையாளன் வாலிபனாய் ஆசரிப்பு கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான்(யாத் 33:11) யோசுவா மோசேக்கு பணிவிடைக்காரனாக அடங்கியிருந்தான். அது போலவே தேவ சந்நிதியிலே காத்திருப்பவனாக ஆசரிப்பு கூடாரத்தை விட்டு பிரியாதிருந்தான், அதற்குதான் தேவன் அவனை தலைவனாக தேர்ந்தேடுத்தார். "நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. நான் மோசேயோடு இருந்ததுபோல உன்னோடும் இருப்பேன். நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடுவதுமில்லை. பலன்கொண்டு திடமனதாயிரு". என்று தேவன் அவனுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தார். (யோசுவா 1 : 5,6)

## 2.தீமோத்தேயு:

பவுல் அப்போஸ்தலன் தன் வாரிசாக ஊழியத்தில் தெரிந்து கொண்ட வாலிபன் தான் தீமோத்தேயு. அவனுக்கு அநேக ஆவிக்குறிய அறிவுரைகளை பவுல் கொடுத்தார். விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருக்க வேண்டும், உபதேசங்களில் நிலைத்திருக்க வேண்டும், நல் மனசாட்சியோடு வாழ வேண்டும், அதை தீமோத்தேயு அப்படியே தன் வாழ்க்கையில் கடைபிடித்தார்."உன் இளமையை குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. (1.தீமோத்தேயு 4 : 12). உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு. இவைகளில் நிலைகொண்டிரு. (1.தீமோத்தேயு 4 : 16) நீ விசுவாசமும் நல் மனசாட்சியும் உடையவனாயிரு (1.தீமோத்தேயு 1 : 18) இவைகளுக்கு தீமோத்தேயு அப்படியே அற்பணித்தான்.

## 3. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ:

பாபிலோன் அரசன் நேபுகாத் நேச்சார் தனக்காக உண்டாக்கின பொற்சிலையை மட்டும் நாட்டுமக்கள் வழிபட வேண்டும் என கட்டளையிட்டான். தவறினால் எரிகிற அக்கினி ஜுவாலையில் போடப்படுவார்கள் என அறிவித்தான், ஆனாலும் இதைக் கேட்ட எபிரேய வாலிபர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் அரசனின் ஆணைக்கு கொஞ்சமும் பயப்படாமல் தேவாதி தேவனை மட்டுமே வணங்குவோம் என அறிவித்தார்கள். கோபமடைந்த அரசன் அவர்களை அக்கினி ஜுவாலையில் போட கட்டளை கொடுத்தான். ஆனாலும் அவர்களோ " நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எங்களை அக்கினி ஜுவாலைக்கும் ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நிங்கலாக்கி விடுவிப்பார், விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது இல்லை என்பது உமக்கு தெரிந்திருக்கக்கடவது என்றுரைத்தார்கள் (தானியேல் 3 : 16 – 8 ). எரிகிற அக்கினி ஜுவாலையில் வீசப்பட்டார்கள், ஆனாலும் நம் தேவனோ இறங்கி வந்து அற்புதமாய் அவர்களைக் காப்பாற்றினார். அரசனும் மனம் திரும்பினார்.

பிரியமானவர்களே இந்த வாலிபர்களை போல தேவன் மேல் வைராக்கியமாய் இருக்க வேண்டும். வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம். (நீதி 20 : 29). ஆகவே ஒவ்வொரு வாலிபனும் யோசுவாவை போல பக்தியும், தீமோதேயுவை போல அர்ப்பணிப்பும் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவைப் போல வைராக்கியமும் உள்ளவர்களாய் வாழ்ந்தால் தேவனுக்காக பெரிய காரியங்களை சாதிக்க முடியும்.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

ATC Youth Team

Be an Example : 1 Timothy 4:12

# ஜெபம்

கர்த்தரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறேன். பவுல் சபைக்காக ஜெபித்தார், எதை மனதில் வைத்து ஜெபித்தார், எதற்காக ஜெபித்தார். அதே போல நாமும் ஜெபிக்க வேண்டும் என்று ஆவியானவர் எதிர்பார்க்கிறார். எபேசியர் ( 1 : 16 - 19 )

ஜெபம் என்றவுடன் சிலர் மனதில் பட்டதை எல்லாம் ஜெபிக்கிறார்கள், தேவைகளுக்காக ஜெபிப்பது, பிரச்சனைகளுக்காக ஜெபிப்பது, ஒரு தீர்வுக்காக ஜெபிப்பது, பவுலிற்கு நம்மைகாட்டிலும் அதிகமான பிரச்சனைகள் போராட்டங்கள் இருந்தது. ஆனால் பவுல் அதற்காக எல்லாம் ஜெபிக்கவில்லை. பிரதானமாக ஜெபித்தது என்னவென்றால் எபேசியர் 1 ஆம் அதிகாரம் 16 - 19 வரையுள்ள வசனத்தில் ஜெபித்தார்.

பவுலின் ஜெபத்திற்கும், இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் அவரும் ஜெபித்து இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் ஜெபத்தை காட்டிலும் பவுலின் ஜெபம் மேலானது. ஏன் என்றால் இயேசு கிறிஸ்துவினுடைய ஜெபம் பிதாவை அறிமுகப்படுத்துகிறார். புதுவிதமாக ஜெபிக்கிறார். பிதாவை என் பிதா என்று அழைக்கச் சொல்லுகிறார்.
ஆனால் அங்கு ஜெபிக்கிற ஜெபத்தில் இயேசு கிறிஸ்து இன்னும் மறிக்கவில்லை, இன்னும் இரத்தம் சிந்தப்படவில்லை. ஆவியானவர் சேர்க்கப்படவில்லை அந்த ஜெபம் புது உடன்படிக்கையின் ஆரம்பம் தான்.

பவுல் ஜெபிக்கும் போது அவர் ஒரு காரியத்தை மனதில் வைக்கிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சிலுவையின் மூலமாய் நமக்கு என்ன நடந்தது என்று நாம் அறிய வேண்டும். அதுதான் விசுவாசிகளாகிய நமக்கு மிகவும் அவசியமாய் காணப்படுகிறது. பவுலின் ஜெபத்தில் பல வெளிப்பாடுகள் உண்டாகிறது. நன்மை இருக்கிறது. இரத்தம் சிந்தப்பட்டு இருக்கிறது. இயேசு கிறிஸ்து மரித்து இருக்கிறார். அவர் நாமம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆவியானவர் ஊற்றப்பட்டு இருக்கிறார். பரிந்து பேசிக் கொண்டே இருக்கிறார். இவ்வளவு காரியங்கள் இருக்கிறது. அதனால் தான் நாம் ஜெபத்தை ஆழமாக தியானிக்க வேண்டும்.

எபேசியர் 1 : 16 - 19 -இந்த ஜெபத்தில் 5 காரியங்களுக்காக அப்போ. பவுல் ஜெபிக்கிறார்.

## தேவனை அறிந்து கொள்ள வேண்டும்:

தேவனை அறிந்து கொள்வதற்கான ஞானம், தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருள வேண்டும் என்று ஜெபிக்கிறார்.
தேவன் யார் என்று அறிந்து ஜெபித்தால் தான் அந்த ஜெபம் வல்லமையுள்ளதாக காணப்படும் தேவன் எப்படிப்பட்டவரென்றே தெரியவில்லை என்றால் நீங்க ஜெபிக்கும் போது யார்கிட்டயோ ஜெபிப்பது போல இருக்கும்.

a.சிருஷ்டிப்பின் தேவனாக
b.ஒழுங்கின்மையை மாற்றுகிறவராக
c.வெறுமையை மாற்றுகிறவராக
d.இருளை மாற்றுகிறவராக இருக்கிறார்
e.வார்த்தையால் உலகத்தை உருவாக்கினார்
f.எல்லாவற்றையும் அவர் வார்த்தையால் உண்டாக்கினார்.

நமக்காகவே இவை எல்லாம் உண்டாக்கினார். நம்மை இரச்சிப்பதற்கு முன்பாகவும் எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தி வைத்து இருக்கிறார். ஒரு நாளும் கை விடமாட்டார்.

இந்த தேவனை யாராலும் மாற்ற முடியாது. தேவன் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். ஜெபித்து அவர் மனதை உருகபண்ண வேண்டும் என்று நினைக்க கூடாது. நாம் ஜெபித்தால் தான் அற்புதம் செய்வார் என்று நினைக்கிறார்கள். அவர் ஏற்கனவே எல்லாவற்றையும் செய்து வைத்து இருக்கிறார். அதனால் தான் நம்மை ஜெபிக்கவே தூண்டுகிறார், ஜெபிக்கிறோம். நாம் ஜெபித்த பிறகு எல்லாவற்றறையும் அவர் ஆயத்தம் செய்யவில்லை எபேசியர் 1 : 3- ல் வாசிக்கிறோம்.
அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

### 1) அவர் நம்மை அழைத்ததின் நம்பிக்கை:

அவர் நம்மை அழைத்ததினாலே உங்களுக்கு என்ன நம்பிக்கை உண்டாயிருக்கிறது. What is a faith? நம்பிக்கையின் மேன்மை இன்னதென்று அறிந்து கொள்ள வேண்டும்.

### 2) மகிமையின் ஐசுவரியம்:

பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று அறிந்து கொள்ள வேண்டும்.

### 3) வல்லமை :

இயேசு கிறிஸ்துவினிடத்தில் வெளிப்பட்ட அதே வல்லமை விசுவாச பிள்ளைகளிடத்தில் வெயிப்பட வேண்டும்.

### 4) பிரகாசமுள்ள மனகண்கள் :

இந்த நான்கையும் புரிந்து கொள்ள பிரகாசமுள்ள மனக்கண்களை கொடுக்க கேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன் என்று பவுல் ஜெபிக்கிறார்

எபேசியர் 2 : 12 அக்காலத்திலே கிறிஸ்துவை சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும்,வாக்குத்தத்தத்தின்உடன்படிக்கைகளுக்குஅந்நியரும்நம்பிக்கையில்லாதவர்களும்,இவ்வுலகத்தில்தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள். எங்கிருந்து நம்மை அழைக்கிறார் என்று சொன்னால் நாம் பாவிகளாய் இருக்கையில் நம்மை அழைத்தார். அழைத்த அழைப்பு கிறிஸ்துவையும், உங்களையும் ஒன்றாக மாற்றிவிட்டது.அவர் தலையாய் இருக்கிறார். நாம் சரீரமாய் இருக்கிறோம். அழைப்பு ஒரு நம்பிக்கையை கொடுக்கிறது. எதற்க்கு அழைத்தார். கிறிஸ்துவை உடையவர்களாய் மாற்ற கிறிஸ்துவின் சரீரங்களில் அவயங்களாய் மாற்ற நம்மை அழைத்து இருக்கிறார்.

தேவன் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
டெய்சி எபிநேசர்.

Pastor. Nigel Solomon

# பாஸ்டர் நைஜல் சாலமோன் வாழ்த்துச் செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி தமிழ் திருச்சபை குடும்பங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அன்பின் வாழ்த்துக்கள். 49 ஆம் ஆண்டு விழாவை காண செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கடந்த வருடம் 48 ஆம் ஆண்டு விழாவில் அடியான் உங்கள் மத்தியில் இருந்ததை நினைத்து மகிழ்கின்றேன். உங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் நீங்கள் செய்த உதவிகளுக்கும் நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கின்றேன் உங்கள் யாவரையும் மனதார வாழ்த்துகிறேன் ஆசீர்வதிக்கின்றேன். இன்னும் பல ஆண்டு விழாக்களை அஹமதி தமிழ் திருச்சபை காண நான் கர்த்தரிடத்தில் மன்றாடுகிறேன்.

எழும்பி பிரகாசி, உன் ஒளி வந்தது, கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. ஏசாயா 60 : 1 இந்த வசனம் சொல்லுகிறபடி இந்த சபையை மாத்திரம் அல்ல, சபையினுடைய விசுவாசிகளையும் கர்த்தர் பிரகாசிக்க பண்ணுவார். நிச்சயமாய் அஹமதி தமிழ் திருச்சபை குவைத் தேசத்தில் மாத்திரமல்ல, உலகின் பல தேசங்களுக்கும் ஆசீர்வாதமாய் வைப்பார். இருளில் வாழ்ந்து கொண்டிருக்கிற அநேகருடைய வாழ்க்கையில் ஒளி வீசுகிற, அநேகருடைய வாழ்க்கையை பிரகாசிப்பிகிற மற்றும் கர்த்தருடைய மகிமையை விளங்க பண்ணுகிற சபையாய் திகழும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

நான் கூறியது போல அஹமதி தமிழ் திருச்சபையை என்னால் மறக்க முடியாது உங்களுக்காக நான் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன், எனக்காகவும், குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள் கர்த்தருக்கு சித்தமானால் மீண்டும் சந்திப்போம் கர்த்தர் உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.



இப்படிக்கு உங்கள்


Pastor. Nigel Solomon
EL-ROI MINISTRIES
Vellore-TamilNadu-India




## இறை இல்லமே!!!

இறை இல்லமாம்
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே!

பாசத்தின் விளைநிலமே,
எங்கள் குடும்பமே,
தாங்கிப் பிடித்த தூண்களுக்கும்,
தலைசாய்த்து ஆறுதல் தந்த
தோள்களுக்கும், வழிகாட்டும்
போதனைகளுக்கும்,
ஜெப உரைகளுக்கும்,
விசுவாசப் பாதையில்
துணை நின்ற உங்களுக்கும்,
சபையெனும் நிழலில்
நாங்கள் வளர, கிறிஸ்துவின் அன்பை
உணர வைத்த உங்களுக்கு,
என்றும் நாங்கள்
கடமைப்பட்டவர்கள்.
எங்கள் குடும்பத்தின் நன்றிகள்

இப்படிக்கு,
**சகோ. தாஸ் கருணா**

தேவாலயத்தின் 49– ஆம் ஆண்டு திருவிழா...
"கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச்
செய்தார், இதினிமித்தம் நாம்
மகிழ்ந்திருக்கிறோம்" – சங்கீதம் 126:3

மூவர் இணைந்து நம்பிக்கையின் விதையை விதைத்த இந்த ஆலயம், இன்று தேவனின் கிருபையால் முப்பது, அறுபது, நூறு மடங்காய் வளர்ந்து பலரின் வாழ்வில் ஒளி பரப்புகிறது.

இந்த ஆலயம் விசுவாசத்தின் வெளிச்சமாய், அன்பும் கருணையும் நிறைந்த திக்கற்றவர் ஊழியமாக நம்பிக்கையற்றோர்க்கு நம்பிக்கை அளித்து, துன்புறும் மக்களுக்கு ஆறுதல் நல்கி வருகிறது.

அந்த அடித்தளத்தை அமைத்த நம்பிக்கையுள்ள தேவ மக்கள் அவர்களின் உழைப்பையும் பிரார்த்தனையையும் நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

இந்த ஆலயம் இன்னும் பல தலைமுறைகளுக்கு விசுவாசம், அன்பு, சேவை ஆகியவற்றின் விளக்காக விளங்கட்டும்.

49– ஆம் ஆண்டு விழா நல்வாழ்த்துக்கள்!

**சகோ. ஜெய் சாம் டேனியேல்**
திக்கற்றோர் ஊழியம் பொறுப்பாளர்

## அன்பான அஹமதி தமிழ் திருச்சபை குடும்பத்தினருக்கு

இன்றைய அஹமதி திருச்சபையின் 49– ஆம் ஆண்டு நினைவு நாளில் நம் தேவாதி தேவனை மகிமைப்படுத்துகிறோம். கடந்த 49– ஆண்டுகளாக திருச்சபையின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இன்று வரை விசுவாசத்துடன் செயல்படும் தற்போதைய உறுப்பினர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான வாழ்த்துகள் மற்றும் நன்றிகள்.

நமது அஹமதி திருச்சபையின் முக்கிய குறிக்கோள் –"ஒவ்வொரு ஆண்டும் ஒரு தேவாலயத்தை கட்டுவது" என்ற மிஷனரித் துறையின் நோக்கத்தை நிறைவேற்றுவதாகும். இதனுடன் நமது அஹமதி திருச்சபை வடஇந்தியா மிஷனரிகளுக்கு உதவி செய்து வருவது அநாதை குழந்தைகளின் பராமரிப்புக்கு பங்களிப்பு வழங்குவது என்பனவும் குறிப்பிடத்தக்கன.

இந்த எல்லா அர்ப்பணிப்புகளுக்கும் பின்புலமாக உழைக்கும் ஒவ்வொருவருக்கும் தேவன் திரும்பவும் பெருகிய ஆசீர்வாதங்களை வழங்குவாராக!

மேலும் இந்த 49– ஆம் ஆண்டு விழாவை சிறப்பாக நடத்துவதற்காக உழைத்த அனைவருக்கும் நன்றிகள். இதை வெற்றிகரமாக நிறைவேற்றிய ஒவ்வொருவரையும் ஆசிர்வதித்த நம் தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

நன்றி மற்றும் ஆசீர்வாதங்களுடன்

**சகோ. சாம் ஆனந்த்**
தேவாலய கட்டுமான அமைப்பு பொறுப்பாளர்

## Thank You Jesus

கடவுளைச் சார்ந்தவன்
கடவுளுக்குசெவிகொடுப்பான்!

சார மறுப்பவன்
சாரமற்று போகிறான்!!

சார்ந்திருப்போம்
சார்பாய் இருப்போம்..

இப்படிக்கு,
**சகோ. தாமஸ்**

## கேம்ப் சகோதரர்களின் வாழ்த்து

கிறிஸ்துவுக்குள் அன்பான
தமிழ் திருச்சபையார் அனைவருக்கும்
ஆண்டவராகிய இயேசு கிறித்துவின் நாமத்தில்
49– வது ஆண்டின் வாழ்த்துகளை
மீனா அப்துல்லா கேம்ப சகோதரர்கள்
சார்பில் கூறி கொள்வதில் பெருமகிழச்சி
அடைகிறோம்...

**மீனா அப்துல்லா**
**கேம்ப் சகோதரர்கள்**

## விடியலைத் தேடி..

விடியலைத் தேடி..
விண்ணவர் நாடி..
மண்ணின் மானிடர் கூடி..
மனம் மகிழும் இடம் நம்
அஹமதி தமிழ் திருச்சபை
தாய் குணம்
தந்தையின் மனம்
உறவின் இனம்
உன்னதர் இயேசுவின் நம்
அஹமதி தமிழ் திருச்சபை
முன்னோர் உண்டு
முதியோர் உண்டு
பத்துவிதமான ஊழியம் கொண்டு
பகட்டே இல்லாத நம்
அஹமதி தமிழ் திருச்சபை
ஐயம் கொள்ளா
ஐந்து தூண்கள்
அயராது உழைக்கும்
அன்பின் கரங்கள் கொண்ட
நம் அஹமதி தமிழ் திருச்சபை

இனிதே வாழ வாழ்த்துகிறேன் நானும்.

இப்படிக்கு,
**சகோ. ஜான்சன்**

## Story – Trust God all the time

A family was struggling with the twins. There name was Arieal and Natasha with money, f ood and water they were poor but they never trusted God. One day there was famine but the twin was smart before and got ready. They growed lots of crops so they survived but they really don't know from whom they got this power. As they grow older they found out it was Jesus who provided this much help they thank Jesus and trusted Him. But their parents didn't, their children convinced them, so they agreed and slowly slowly they realized their family was getting much better wealth, health and supportive. And days passed, by the people of the land started worshipping God, trusting God and God gave a bunch of blessing to Arieal and Natasha.

Trust in the Lord with all your heart and lean not on your own understanding
Proverbs-3:5

By Fyona C.S Sweettyn.

# அரவணைக்கும் அன்புத் தாயே!!!

எங்கெங்கோ தெரியாதவர்களாய் இருந்த எங்களை தேவன் தெரிந்துகொண்டார். சபையில் இணைத்தார், பரிசுத்தப்படுத்தினார், இரட்சித்தார், விடுதலை கொடுத்தார், எங்கள் வாழ்க்கையை மாற்றினார்.

வெவ்வேறு வீடுகளில் இருந்த நாங்கள் இன்று ஒரே வீடாகிய சபையில் சேர்க்கப்பட்டுள்ளோம், குடும்பம் குடும்பமாய் இணைக்கப்பட்டு ஒரே குடும்பமானோம்.. ஒரே தகப்பனின் பிள்ளைகளானோம் எங்கள் சபையின் தலைவர் கிறிஸ்துவெ, அவரே எங்களை நடத்தினவர், நடத்துகின்றவர், நடத்துபவர்.

தேவன் அளித்த அடைக்கல கூடாரம் எங்கள் சபை, அரவணைத்து ஆறுதல் அளிக்கும் அப்பாவின் வீடு எங்கள் சபை, ஜெபிக்க கற்றுக் கொடுக்கும் ஜெப வீடு எங்கள் சபை, துதியின் சத்தம் கேட்கும் துதியின் கூடாரம் எங்கள் சபை, வசனத்தை போதிக்கும் தேவ வார்த்தையின் வாசல் எங்கள் சபை,

எங்கள் வாழ்கையின் வனாந்திரத்தை வளமாய் மாற்றி நினைப்பதற்கும், எண்ணுவதற்கும் மேலாய் எங்களுக்கு ஆசீர்வாதங்களை தந்த சபை எங்கள் சபை, வேற்று மனிதர்களாய் இருந்த எங்களை வேறுபிரிக்கப்பட்டவர்களாய் மாற்றியது எங்கள் சபை.

தேவன் விலையேறப்பெற்ற இரத்தத்தை கொண்டு விலைக்கிரயமாய் வாங்கிய சபை எங்கள் சபை,
பரமனை பார்க்க பரலோகம் கூட்டிச்செல்லும் சபை எங்கள் அஹமதி தமிழ் திருச்சபை.

49- வது ஆண்டு விழாவைக் காணும் எம் அஹமதி தமிழ் திருச்சபையே!!
நீர் என்றும் வாழ்க வாழ்கவே!!!

இப்படிக்கு
எப்சிபா ஸ்டீபன்

## சபைக்கு வாழ்த்துக்கள்

49-வது ஆண்டு விழா
மற்றும்,
23 வது சிறுவர் வேதாகம பள்ளி
ஆண்டு விழாவை
கொண்டாடுகிற உங்கள் அனைவரையும்
இயேசு கிறிஸ்துவின்
இனிதான நாமத்தினால்
மனமார வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
S.சிவக்குமார்

## Church Anniversary Poem

Through quiet prayers and Joyful sound,
GOD's grace and peace are all around
Years have passed, yet use still stand
Guided gently by GOD's hand.
Hearts united, faith runs deep-
His promise, ours to keep.

-Adriel Kemuel Dhas

## நறுமணம் வீசும் மலரே!!!

குவைத்தில் பூத்தமலரே!!
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே!
பாலைவனத்தில் பூத்தமலரே!
எல்லோரும் பார்க்கும் அஹமதி தமிழ் திருச்சபையே!
பலசபைகளின் தாய் சபையாய்
எல்லோருக்கும் கனிகொடுக்கும்
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையே!
49 ஆண்டுகள் கடந்து ஆறுதலின் சபையாய்
கண்ணீரைப் போக்கும் சபையாய்
தேவனை பற்றி அறிகிற அறிவிலே வளர்க்கும் சபையாய்
ஊழியக்காரர்களை உருவாக்கும் சபையாய்
எங்கள் அஹமதி தமிழ் திருச்சபையாம்
பல ஆண்டுகளை காண இயேசுவின் வருகைக்கு
எதிர்கொள்ளும் சபையாய் இருக்க
நானும் வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,
கர்த்தரின் பணியில்
சகோதரி. டெய்சிரோஸ்
எபிநேசர்

## Maranadha come soon

Dear Lord, oh my Lord who is Kings of Kings. The Lord who made us and brought us to the beautiful world called earth. He made beautiful flowers, oceans, cute animals, kind animals and so many things which can't be expressed in words my loving God is so wonderful he has made golden house for us. The beams of our houses are cedar. For our mighty Lord is coming soon.

We are waiting for that moment
Maranadha come soon

Ashlyn Keziah

## அஹமதி தமிழ் திருச்சபையே!

சிலரின் விழி வேர்வையில் உருவாகி
பலரின் விழிதுயர் ஒழித்த
உயர்வு தாழ்வு ஏதும் இல்லா
உன்னதர் இயேசுவின் உறைவிடம் அல்லோ நீ!!

பிறந்த நாள் முதல் இந்நாள்வரை
வித்திட்ட வித்தகர்களின் வித்தான எங்களின்
விழி நீரையும் விதையாக்கிவிளைத்திட்ட
விண்ணவர் இயேசுவின் வழி சுவடு அல்லோ நீ!!

கின்னர கீதவாத்தியம் இசைத்து
கிருபை இரக்கம் ஆசீர் பெற்று
சத்திய ஜீவவார்த்தை உரைக்கும்
சர்வவல்ல இயேசுவின் அடிசுவடு அல்வோ நீ!!

மழலை மகளிர் மகிபனின் ஊழியம்
மந்தைசேர் ஆத்ம ஆதாய ஊழியம்
வல்லமையாய் வாலிப ஐக்கிய ஊழியம்
வாரந்தோறும் அன்பின் குடும்ப ஊழியம்

உலகம் முழுவதும் பறைசாற்றும் சுவிசேஷ ஊழியம்
உன்னதர் இசேுவின் இணையதள ஊழியம்
உமக்கென்று பிரகாசிக்க எழும்பும்
உன்னுள் உள்ளவரின் தாலந்தின் செய்திமலர் ஊழியம்

தயாபரன் இசேுவின் மகிமை தாபரிக்க
தாங்கிடுவோர் துணை கொண்டு
தூரதேசத்தின் துதி முழங்க
தூபம் போல் மக்கள் ஜெபம் எழும்ப
தூயவர் கூடாரக் கட்டுமான பணி ஊழியம்

நவமான ஊழியம் நாளும் நலமுடன் தொடர
நாமும் வாழ்த்திடுவோம் வாழிய வாழியவெனவே!!
இன்னும் இறைவனை வேண்டிடுவேன்
இவரின் இன்ப பணிதொடர, பல நூற்றாண்டு காண!!

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
நகோமி

# என்ன தவம் செய்தோமோ!!!

அஹமதியில் அன்பு கூர்ந்து அக மகிழ்ந்து இருக்கும் என் அஹமதிதமிழ் திருச்சபையே!
ஆராதிக்க கூடிவரும் ஜனங்களின் துயர் துடைத்த என் அஹமதிதமிழ் திருச்சபையே!
இன்ப இயேசுவின் குடும்பமாக இயேசுவின் மார்பினிலே சாய்ந்திட்ட சீஷத்துவம் கொண்ட, என் அஹமதி தமிழ் திருச்சபையே!
ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் போல தாய்மையின் காட்ச்சியான, சாட்ச்சியான என் அஹமதி தமிழ் திருச்சபையே!
உலகமெங்கும் உன்னில் உதித்த மலர்கள், உன் வாசம் கமழும் வாழ்வு வாழச் செய்யும் என் அஹமதி தமிழ் திருச்சபையே!
ஊரெங்கும் உஷ்ணம் உணர்ந்தாலும், உனக்குள் அமரும் போது ஆனந்தமடைய செய்யும் என் அஹமதி தமிழ் திருச்சபையே!
என் இன்ப கானான் கண்டு களித்திட, நானும் என் வீட்டாருமோ சேவித்திட, சேற்றில் பூத்த செந்தாமரை போல் பாலை நிலத்தில் பூத்திட்ட என் அஹமதிதமிழ் திருச்சபையே!
ஏக்கத்தோடு வந்தபோது ஏன் தயக்கமென இருகரம் ஏந்தி ஏணி போல என் வாழ்வினை சிறப்பித்த என் அஹமதிதமிழ் திருச்சபையே!
ஐவர் குழு உன்னில் அலங்கரிக்க, அங்கமாய் ஐயிரெண்டுபத்தென ஊழியம் பெருகிட, ஐயமின்றி வாழ வார்த்தையால் உள்ளம் நிறைந்திட்ட என் அஹமதி தமிழ் திருச்சபையே!
ஒருமனமாய் ஒற்றுமையாய் உன்னில் அன்புடன் கூடி வந்து குதுகலமாக ஆண்டு 49– னை சிறப்பிக்க செய்த என் அஹமதி தமிழ் திருச்சபையே!
ஓராயிரம் கண்கள் உம்மை நோக்கி இருக்க ஓடி உரைத்து, ஆத்தும ஆதாயப்பணி செய்யும் உள்ளங்கள் நாளுக்கு நாள் பெருகிட செய்யும் என் அஹமதிதமிழ் திருச்சபையே!
ஔஷதமான சபையில் ஆவியானவர் ஆளுகை செய்யும் என் அஹமதிதமிழ் திருச்சபையே!
என்னதவம் செய்தோமோ! இத்தனை ஆண்டுகள் என் குடும்பத்தோடு உன்னில் சுகித்திருக்க!

என்றென்றும் சீர் இயேசு நாதனின் சீர் பெற்று வாழ்ந்திட வாழ்த்தும்

இப்படிக்கு,
சகோ. எபிநேசர்

# VICTORY WORSHIP CENTRE

(Regd No.: 50/2015)

Rev. L. Jebaraj
Pastor

கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி தமிழ் திருச்சபை மக்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் மதுரை விக்டரி ஆராதனை மையத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

புதிய ஆண்டுக்குள் நுழையும் தங்கள் திருச்சபை மக்கள் அனைவரையும் கர்த்தர் தாமே நிறைவாய் ஆசீர்வதிப்பாராக.

கடந்த 49 ஆண்டுகள் திருச்சபையை கரம் பிடித்து நடத்தி வந்த நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து தாமே தமது கிருபையின் ஐஸ்வரியத்தினாலே தொடர்ந்து தங்களையும் தங்கள் திருச்சபையையும் நிரப்பி நடத்துவாராக.

"எழும்பி பிரகாசி : உன் ஒளி வந்தது" என்ற ஏசாயா தீர்க்கனின் மூலம் வாக்குரைத்தவர் தாம் உரைத்த வாக்கின் படியே உங்களை எழும்பி பிரகாசிக்கும்படி தமது வார்த்தையினாலும், வல்லமையினாலும் பலப்படுத்துவாராக. சபையாக, குடும்பமாக, தனிப்பட்ட விதத்திலும் வல்லமையான எழுப்புதலை அடைந்து அவருக்காக உப்பாய், ஒளியாய் பிரகாசித்து அநேகரை அந்த ஒளிக்குள் வழி நடத்துகிறவர்களாக விளங்கச் செய்யும்படி வாழ்த்தி ஜெபிக்கிறேன்.

**கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!!!**



கர்த்தரின் பணியில்,
பாஸ்டர். L ஜெபராஜ்,
Victory Worship Center
Madurai


Bro . Arokiadhas
President
Bro . Johnson
Treasurer
Bro . Thomas
Secretary
Bro . Christopher
Youth Leader
Sis . Daisy Ebenezer
Womens's Leader
Bro . Jagan
Magazine Ministry
Bro . Siva Kumar
Prayer Ministry
Bro . Karuna Dhas
Missionary
Ministry
Bro . Kirankumar
Transport Ministry
Bro . David
Jayakumar
Choir Ministry
Bro . Sam Ananth
Church Construction
Ministry
Bro . Sam Daniel
Orphanage Ministry
Sis. Jeba
Sunday school
Ministry
Bro . Sam Sundar
Visual Communication
Ministry
Bro . Ravi John Peter
Camp Ministry
Committee members &
ministry coordinators


பரி. பவுல் அஹமதி தமிழ் திருச்சபை குடும்பம்– 2025